**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2022–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08–ஆம் நாள் வெள்ளிக் கிழமை

**அசல் வழக்கு எண்.342/2020**

**CNR. No. TNDG01-004122-2020**

1. திருமதி. பாண்டீஸ்வரி
2. திருமதி. கோமதி
3. திரு. செல்வமணி .... வாதிகள்

/எதிர்/

1. திருமதி. முத்தம்மாள்
2. திரு. வாகுலிபன்
3. திருமதி. மங்கையர்கரசி
4. திருமதி. பாப்பாத்தி
5. திருமதி. மாரியம்மாள் மகேஸ்வரி
6. திருமதி. மாரியம்மாள்
7. திருமதி. பாப்பாத்தி
8. திருமதி. ராஜேஸ்வரி
9. திரு. கார்த்திகேயன்
10. திரு. சரவணன்
11. திருமதி. வளர்மதி
12. திருமதி. வேம்பாயி

13. திரு. மாரியப்பன்

14. திரு. தெண்டபாணி

15. திரு. பாபு

16. திருமதி. சண்முகவள்ளி

17. திருமதி. தனம்

18. திரு. மாரியப்பன்

19. திரு. பொன்னர்சங்கர்

20. திருமதி. பாப்பாத்தி

21. திருமதி. சித்ரா

22. திருமதி. மணிமேகலை

23. திரு. வேலன்

24. திரு. செந்தில்குமார்

25. திருமதி. கனகலட்சமி

26. திருமதி. தங்கமலர்

27. திரு. பழனிவேல்

28. திருமதி. உமாமகேஸ்வரி

29. திருமதி. மகாலட்சமி

30. திரு. மணி

31. திரு. ராமசாமி .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 30.03.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. என். பழனிச்சாமி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்து

ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 1/4 பாகம் ஒதுக்கீடு செய்து ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், அதன்பிறகு சொத்தின் சுவாதீனத்திற்காக ஒரு இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மனு செய்ய அனுமதி கோரியும் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.

2. **வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் :–**

சர்வே எண்.1491/1 முழுவதும் அப்பணன் சாம்பானுக்கு தோட்டி மானியமாக அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது. அப்பணன் சாம்பானுக்கு பழனி சாம்பான், முத்தன் சாம்பான், சீரங்கன், ஆறுமுகம் ஆகியோர்கள் வாரிசுதாரர்கள். அப்பணன் சாம்பானுக்கு பிறகு மேற்படி நால்வரும் சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார்கள். அதில் சீரங்கனுக்கு வாரிசு எதுவுமில்லாமல் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு காலமாகிவிட்டார். அப்பணன் சாம்பானுடைய சொத்துக்களை அவருடைய வாரிசுதாரர்களான பழனி சாம்பான், முத்தன் சாம்பான், ஆறுமுகம் ஆகியோர் சுமார் 85 வருடங்களுக்கு முன்பாக வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டார்கள். தாவா சொத்து முத்தன் சாம்பானுக்கு ஒதுக்கப்பட்டது. முத்தன் சாம்பானுக்கு ஆறுமுகம், முருகேசன், தாதன் என்ற கருப்பையா, அய்யாவு என நான்கு மகன்கள். முத்தன் சாம்பானின் மகன் ஆறுமுகம், ஆறுமுகத்திற்கு வாதிகளின் தகப்பனாரான பழனிவேல் மற்றும் ஜோதி ஆகிய இரண்டு மகன்கள். ஜோதி வாரிசின்றி காலமாகிவிட்டார். ஆறுமுகம் சொத்துக்களைப் பொறுத்து ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார். ஆறுமுகத்தின் வாரிசுதாரர் பழனிவேல். பழனிவேலுக்கு 2 மற்றும் 3 வாதிகளும், மணிகண்டனும் பிள்ளைகள். மணிகண்டன், காணாமல் போய்விட்டார். அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. பழனிவேல்,

09.10.2020 அன்று காலமாகிவிட்டார். பழனிவேலின் மனைவி 1–ஆம் வாதி, பழனிவேலின் பிள்ளைகள் 2 மற்றும் 3 வாதிகள். முத்தன் சாம்பானின் மகன் முருகேசன். முருகேசனுடைய ஒரே மகன் தங்கவேல். தங்கவேலின் மக்கள் 17 முதல் 19 பிரதிவாதிகள். தங்கவேலின் மகள் பாப்பாத்தி திருமணமாகாமலேயே இறந்துவிட்டார். முத்தன் சாம்பானின் மகன் தாதன். தாதன் தன்னுடைய மனைவி முத்தம்மாள், மக்கள் ஜெயராமன், வடிவேல், சாமிமுத்து ஆகிய 4 பேர்களை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். தாதன் என்ற கருப்பையாவின் மகன் ஜெயராமன், 1 முதல் 5 பிரதிவாதிகளை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். தாதன் மகன் கருப்பையாவின் மற்றொரு மகன் சாமிமுத்து 6 முதல் 11 பிரதிவாதிகளை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். தாதன் மகன் வடிவேல், 12 முதல் 16 பிரதிவாதிகளை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். முத்தன் சாம்பானின் மகன் அப்பாவு தனது மகனான சக்திவேல் மற்றும் மகளான 22–ஆம் பிரதிவாதி மணிமேகலை ஆகியோரை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். சக்திவேல் தனது மக்களான 20 மற்றும் 21 பிரதிவாதிகளை தனது வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். சொத்துக்களை மோசடி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் 6–ஆம் பிரதிவாதியின் கணவர் சாமிமுத்து பெயரிலும், 1–ஆம் பிரதிவாதியின் கணவர் ஜெயராமன் பெயரிலும், முத்தம்மாள் எழுதிக் கொடுத்ததுபோல் 11.01.1989–ஆம் தேதியிட்ட ஒரு செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வைத்துள்ளார்கள். அந்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல. மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் 1–ஆம் பிரதிவாதியின் கணவரும், 23–ஆம் பிரதிவாதியும் சேர்ந்து 05.08.1996–ல் 23–ஆம் பிரதிவாதியின் பெயரில் கிரையப் பத்திரம் உற்பத்தி செய்துள்ளார்கள். அது வாதிகளின் பாகத்தைப் பொறுத்து கட்டுப்படுத்தாது. 1–ஆம் பிரதிவாதியின் கணவரும், 6–ஆம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 11 பிரதிவாதிகளும், 23–ஆம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து 1–ஆம் பிரதிவாதிக்கு 23.02.2011 தேதியிட்ட கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள். அது மோசடியான கிரையப் பத்திரமாகும். அதேபோல், 20.06.2019 தேதியிட்ட கிரையப் பத்திரம் மோசடியாக தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி கிரையப் பத்திரங்களின்

விவரத்தைப் பொறுத்து வாதிகள் வடமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் சொத்து சம்பந்தமாக வில்லங்கம் எடுத்து பார்த்தபோது தான் தெரிய வந்தது. தாவா சொத்து தோட்டி மானியம் சொத்து. அதைப் பொறுத்து உயர் வகுப்பை சார்ந்த 24 முதல் 31 பிரதிவாதிகள் கிரையம் பெற உரிமையில்லை. ஆகவே, தாவா சொத்துக்களில் பாகப்பிரிவினை வேண்டி 18.05.2020 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதற்கு பிரதிவாதிகளின் தரப்பில் 30.05.2020 அன்று பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதற்கு வாதிகள் தரப்பில் 09.09.2020 அன்று மீண்டும் ஒரு ரீ–ஜாயிண்டர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனால் பிரதிவாதிகள் சொத்துக்களை பிரித்துக் கொடுக்கவில்லை. ஆகவே, இந்த வழக்கு.

**3.** வாதிகளின் தரப்பில் 3 வது வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.22 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4. **<u>தீர்விற்குரிய பிரச்சனை :</u>**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ளவாறு வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் 1/4 பாகம் கிடைக்கக் கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

5. வாதிகளின் குறிப்பான வழக்கு யாதெனில், தாவா சொத்துக்களும் மற்றும் இதர சொத்துக்களும் ஆதியில் ஒரு அப்பணன் சாம்பானுக்கு தோட்டி மானியமாக அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது எனவும், அப்பணன் சாம்பானுக்கு பழனிவேல் சாம்பான், முத்தன் சாம்பான், சீரங்கன், ஆறுமுகம் ஆகிய நான்கு மகன்கள் எனவும், அதில் சீரங்கன் வாரிசுதாரர் இல்லாமல் இறந்துவிட்டதாகவும், அப்பணன் சாம்பானின் சொத்துக்களை, பழனிவேல் சாம்பான், முத்தன் சாம்பான், ஆறுமுகம் ஆகியோர் பொதுவில் அனுபவம் செய்து வந்து, வாய்மொழியாக பிரித்துக் கொண்டதில், தாவா சொத்து முத்தன் சாம்பானுக்கு ஒதுக்கப்பட்டது என்பதையும், முத்தன் சாம்பானுக்கு ஆறுமுகம், முருகேசன், தாதன் என்ற கருப்பையா, அப்பாவு என நான்கு மகன்கள் எனவும், முத்தன் சாம்பான் ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதாகவும்,

ஆறுமுகத்திற்கு 2 மற்றும் 3 வாதிகளின் தகப்பனாரான பழனிவேல் மற்றும் ஜோதி ஆகிய இரு மகன்கள் எனவும், ஜோதி வாரிசின்றி இறந்துவிட்டதாகவும், பழனிவேலுக்கு 2 மற்றும் 3 வாதிகள் மற்றும் ஒரு மணிகண்டன் பிள்ளைகள் எனவும், 1–ஆம் வாதி, பழனிவேலின் மனைவி எனவும், மணிகண்டன் காணாமல் போய்விட்டதாகவும், அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப் பட்டதாகவும், தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 1/4 பாகம் உள்ளது எனவும், ஆனால் அவர்களுடைய பங்காளிகளான 1 முதல் 23 பிரதிவாதிகள் சொத்துக்களைப் பொறுத்து பல்வேறு கிரையப் பத்திரங்கள் மற்றும் செட்டில்மெண்ட் பத்திரங்கள் ஏற்படுத்தி உள்ளதாகவும், 24 முதல் 31 பிரதிவாதிகள் சொத்துக்களை கிரையம் பெற்ற நபர்கள் எனவும், தோட்டி மானியமாக உள்ள நிலையில், அந்த சொத்துக்களை அவர்கள் கிரையம் பெற உரிமையில்லை எனவும், வாதிகளின் தரப்பில் பாகப்பிரிவினைக்காக அறிவிப்பு அனுப்பி, பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்து கொடுக்க முன்வரவில்லை எனவும், ஆகவே, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

6. வாதிகளின் தரப்பில் 3–ஆம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.22 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பாகப்பிரிவினைக்காக வா.சா.ஆ.13 படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு வா.சா.ஆ.17 படி பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதில் உறவுமுறையை ஒத்துக் கொண்டுள்ளார்கள். ஆனால் பாகம் கிடைக்கத்தக்கதல்ல என தெரிவித்துள்ளார்கள். அதற்கு வாதிகளின் தரப்பில் வா.சா.ஆ.18 படி பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் வாதிகளின் பங்காளிகளும் மற்றும் சொத்தை கிரையம் பெற்ற நபர்களும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டும், அவர்களுக்கு தகுந்த முறையில் அழைப்பாணை அனுப்பப்பட்டும், அவர்கள் யாரும் இந்த வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1–ல் வாதிகளின் உறவுமுறை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.1–ன் சாட்சியத்தில் சொத்தில் அவர்களுக்கு உள்ள பாக பாத்தியத்தை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.1–ன் சாட்சியத்திற்கு மாறுபட்ட விதத்தில் சாட்சியம் எதுவும் இல்லை. பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினராகியுள்ளனர். ஆகவே, மேற்படி

சாட்சி மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் 1/4 பாகம் வாதிகளுக்கு பிரித்துக் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என இந்த பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 1/4 பாகம் ஒதுக்கீடு செய்து ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து, வாதிகளின் 1/4 பாகத்தை பிரதிவாதிகள் இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் பிரித்து, தனித்த சுவாதீனம் கொடுக்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் வாதிகள், தாவா சொத்துக்களில் 1/4 பாகத்தை பிரித்து தனித்த சுவாதீனம் பெற ஒரு இறுதிநிலை தீர்ப்பாணைக்கு மனு செய்ய அனுமதியளித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதி, விரிவாக்கம் செய்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைத்திருத்தி இன்று 2022–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN
Digitally signed by P SARAVANAN
Date: 2022.04.08 14:07:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

**வாதிகள் தரப்பு சாட்சிகள் :**

1. வா.சா.1 – செல்வமணி

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :**

1. வா.சா.ஆ.1 – வாதிகள் மற்றும் 1 முதல் 22 பிரதிவாதிகள் உறவுமுறைகளை காட்டக்கூடிய கொடிவழி ஜாபிதா அசல்.
2. வா.சா.ஆ.2 – 12.07.2019–ம் தேதியிட்ட தாவா சர்வே 1491/1–க்கான செட்டில் மெண்ட் ரிஜிஸ்டர் நகல்.
3. வா.சா.ஆ.3 – 01.10.2019–ம் தேதியிட்ட தாவா சர்வே 1491/1–க்கான கிராம கணக்கு ரிஜிஸ்டர் சான்று நகல்.

| | | |
|---|---|---|
| 4. வா.சா.ஆ.4 | – | 18.06.2018–ம் தேதி பட்டா TD 522–க்கான பழனி சாம்பான் பெயரில் உள்ள 1383–ம் பசலிக்கான சிட்டா சான்று நகல். |
| 5. வா.சா.ஆ.5 | – | 18.06.2018–ம் தேதியிட்ட சர்வே 1491/1–க்கான பசலிக்கான அடங்கல் சான்று நகல். |
| 6. வா.சா.ஆ.6 | – | 11.01.1989–ம் தேதியிட்ட தாதன் (எ) கருப்பையா மனைவி, ஜெயராமன், சாமிமுத்து ஆகிய இருவர் பெயரில் உற்பத்தி செய்து வைத்துள்ள செட்டில் மெண்ட் சான்று நகல். |
| 7. வா.சா.ஆ.7 | – | 05.08.1996–ம் தேதியிட்ட தாவா சொத்தை ஜெயராமன், சாமிமுத்து ஆகியோர் மோசடியாக உற்பத்தி செய்து வைத்துள்ள கிரைய பத்திரம் சான்று நகல். |
| 8. வா.சா.ஆ.8 | – | 23.02.2011–ம் தேதியிட்ட 23–ம் பிரதிவாதி ஜெயராமன் 2 முதல் 11 பிரதிவாதிகள் 1–ம் பிரதிவாதி பெயரில் உற்பத்தி செய்து வைத்துள்ள கிரையப்பத்திரம் சான்று நகல். |
| 9. வா.சா.ஆ.9 | – | 20.06.2019–ம் தேதியிட்ட 1, 6 பிரதிவாதிகள் 24 முதல் 31 பிரதிவாதிகள் பெயரில் உற்பத்தி செய்து வைத்த கிரையப்பத்திரம் சான்று நகல். |
| 10. வா.சா.ஆ.10 | – | 22.08.2019–ம் தேதி சர்வே 1491/1–க்குரிய 01.01.1920–ம் தேதி முதல் 31.12.1974–ம் தேதி வரையிலான வில்லங்க சான்றுகள் (3 எண்ணம் ) அசல். |
| 11. வா.சா.ஆ.11 | – | 16.10.2019–ம் தேதி சர்வே 1491/1–க்குரிய 01.01.1975–ம் தேதி முதல் 15.10.2019–ம் தேதி வரையிலான வில்லங்க சான்று கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டவை. |
| 12. வா.சா.ஆ.12 | – | 27.01.2020–ம் தேதி சர்வே 1491/1B–க்குரிய 01.01.2019–ம் தேதி முதல் 26.01.2020–ம் தேதி வரையிலான வில்லங்க சான்று கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டவை. |

13. வா.சா.ஆ.13 – 18.05.2020–ம் தேதி பிரதிவாதிகளுக்கும் வடிவேல் மகன் சந்திரா, தங்கவேல் மனைவி சாந்தா ஆகியோருக்கு மேற்படியார்கள் தகப்பனார் பழனிவேலுவும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு கைநகல்.

14. வா.சா.ஆ.14 – மேற்படி அறிவிப்பை 2, 3, 7 முதல் 10, 12, 13, 15, 17, 19, 20, 23, 25 முதல் 29 மற்றும் 31 பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டைகள் மொத்தம் 19 அட்டைகள் அசல்.

15. வா.சா.ஆ.15 – மேற்படி அறிவிப்பை 1, 4 முதல் 6, 11, 14, 16, 18, 21, 22, 24, 30 பிரதிவாதிகள் பெற்றுக் கொள்ள மறுத்து திரும்ப வந்த உரைகள் மொத்தம் 12 எண்ணம் அசல்.

16. வா.சா.ஆ.16 – வடிவேல் மகள் சந்திரா மற்றும் தங்கவேல் மனைவி சாந்தா ஆகியோர் இறந்துவிட்டதால் மேற்படி அறிவிப்பு பெற்றுக் கொள்ளாமல் திரும்ப வந்த உரை மொத்தம் 2 எண்ணம் அசல்.

17. வா.சா.ஆ.17 – 30.05.2020–ம் தேதி 2, 3, 7 முதல் 10, 12, 13, 15, 17, 19, 20, 23, 25 முதல் 29, 31 பிரதிவாதிகளுக்காவும், 1, 4 முதல் 6, 11, 18, 24, 30 ஆகிய பிரதிவாதிகளுக்காவும் 2–ம் பிரதிவாதி மேற்படி 18.05.2020–ம் தேதிய அறிவிப்புக்கு தன் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல்.

18. வா.சா.ஆ.18 – 09.09.2020–ம் தேதி மேற்படி 30.02.2020–ம் தேதிய பதில் அறிவிப்பிற்கு 2, 3 பிரதிவாதிகளும் மேற்படியார்களின் தந்தை பழனிவேலும் தங்கள் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய Re – Joinder Notice நகல்.

19. வா.சா.ஆ.19 – மேற்படி 09.09.2020–ம் தேதிய Re – Joinder Notice பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல்.

20.வா.சா.ஆ.20 – 10.03.2018–ம் தேதி 2, 3 வாதிகளின் உடன் பிறந்த சகோதரர் மணிகண்டன் காணாமல் போனதால் வடமதுரை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு Cr.No.194/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டது.

21. வா.சா.ஆ.21 – 26.10.2020–ம் 09.10.2020–ம் தேதியில் 2, 3 வாதிகளின் தகப்பனார் பழனிவேல் இறந்து போனதற்கான இறப்பு சான்று கணினி தரவு.

22. வா.சா.ஆ.22 – 25.08.2020–ம் தேதியிட்ட தாவா சொத்துக்குரிய வழிகாட்டி மதிப்பு சான்று அசல்.

P SARAVANAN Digitally signed by P SARAVANAN Date: 2022.04.08 14:08:08 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

Additional District Court,

Dindigul.

O.S. No. 342/2020

Judgment : FAIR

Dated : 08.04.2022